# தகுதிபெறும் முதியவர்கள் வழக்கமான பல் பராமரிப்பு சிகிச்சைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

தகுதிபெறும் அனைத்து முதியவர்களுக்கும், உயர்ந்த தரமான பல் பராமரிப்பு சிகிச்சைகளை, ஒன்டாரியோ முதியோர் பல் பராமரிப்புத் திட்டம் (OSDCP) வழங்குகிறது.

### யார் தகுதி பெறலாம்?

பின்வருவனவற்றை கொண்டிருந்தால் நீங்கள் தகுதி பெறலாம்:

- வயது 65 அல்லது அதற்கும் அதிகம்
- ஒன்டாரியோவில் வசிப்பவர்
- தனி ஒருவருக்கு ஆண்டு நிகர வருமானம் 25,480 டொலர்கள் அல்லது அதற்கும் குறைவாக இருத்தல். தம்பதிகள் என்றால் 42,290 டொலர்கள் அல்லது அதற்கும் குறைவாக இருத்தல்
- கனடா பல் பராமரிப்புத் திட்டம் (CDCP) தவிர வேறு பல் பராமரிப்பு உதவிகள் இல்லாதவர்கள். இது தனியார் காப்புறுதி அல்லது ஒன்டாரியோ வர்கஸ், ஒன்டாரியோ ஊனமுற்றோர் ஆதரவுத் திட்டம் அல்லது காப்பீடு செய்யப்படாத சுகாதார உதவிகள் போன்ற வேறு அரசாங்க பல் பராமரிப்பு உதவிகளை உட்படுத்தும். ஒருவர் தகுதி உடையவராக இருந்தால் CDCP உதவியையும் OSDCP உதவியையும் பெற்றுக்கொள்ளலாம்.

### பல் பராமரிப்பை நான் எங்கே பெற்றுக்கொள்ளலாம்?

பொதுசன சுகாதார பிரிவுகள் (PHU) மற்றும் பங்கேற்கும் சமூக சுகாதார நிலையங்கள் (CHC), பழங்குடியின சுகாதார அணுகல் நிலையங்கள் (AHAC), மற்றும் சில இடங்களில் மொபைல் பல் கிளினிக்குகளின் மூலமாக பல் பராமரிப்பு சேவைகள் வழங்கப்படும்.

### என்ன சேவைகள் உட்படுகின்றன?

- பரிசோதனைகள் மற்றும் மதிப்பீடுகள்
- தடுப்பு சேவைகள்
- உடைந்த பற்களைத் திருத்த மற்றும் துவாரங்களை சரிசெய்ய மறுசீரமைப்பு சேவைகள்
- பற்களை அல்லது அசாதாரண திசுக்களை அகற்ற வாய்வழி அறுவை சிகிச்சை
- எக்ஸ்ரேக்கள்
- மயக்க மருந்து
- தொற்று மற்றும் வலிக்கு சிகிச்சையளிப்பதற்கான என்டோடோன்டிக் சேவைகள்
- முரசு (ஈறு) நிலைமைகள் மற்றும் நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான காலகட்ட சேவைகள்.

### செயற்கைப் பல் கட்டுதல் பற்றி என்ன?

செயற்கைப் பல் கட்டுதல் உட்பட புரோஸ்தோடோன்டிக் சேவைகளுக்கான ஒரு பகுதி செலவு செலுத்தப்படும். மேலதிக தகவலுக்கு உங்கள் உள்ளூர் பொதுசன உடல்நல பிரிவில் பேசவும்.

### நான் எப்படி விண்ணப்பிப்பது?

ஒன்டாரியோ முதியோர் பல் பராமரிப்பு திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு பல வழிகள் உள்ளன:

- ontario.ca/SeniorsDental இல் ஆன்லைனில் விண்ணப்பிக்கவும்
- உங்கள் விண்ணப்பத்தை அச்சிட்டு, நிரப்பி தபாலில் அனுப்பவும்
- விண்ணப்பப் படிவத்தைப் பெற உங்கள் உள்ளூர் பொது சுகாதாரப் பிரிவு அல்லது பங்கேற்கும் CHC அல்லது AHAC க்குச் செல்லுங்கள் மற்றும்/அல்லது உங்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான உதவியையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

### நான் அங்கீகரிக்கப்பட்டால் என்ன நடக்கும்?

உங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதும், உங்களுக்கு வரவேற்பு தொகுப்பும் பல் அட்டையும் அனுப்பப்படும். சேவைகளைப் பெற, இந்தச் சேவையை வழங்கும் பொது உடல்நலப் பிரிவு, சமூக உடல்நல நிலையம் அல்லது பழங்குடியின சுகாதார அணுகல் நிலையத்தில் இந்த அட்டையை வழங்கவும்.

திட்டத்தில் தொடர்ந்து பங்கேற்பதற்கான உங்கள் தகுதி, அல்லது தேவைப்பட்டால் திட்டத்திற்கு எப்படி மீண்டும் விண்ணப்பிப்பது என்பது குறித்து ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு அறிவிக்கப்படும்.

### எனக்கு உதவி தேவைப்பட்டால்?

416-916-0204 ஐ அழையுங்கள்
இலவசம் 1-833-207-4435
TTY 1-800-855-0511

Ontario

TAMIL – FREE ROUTINE DENTAL CARE FOR ELIGIBLE SENIORS. Publication No. (301298). ISBN 978-1-4868-7042-4. PDF. Updated August 2026. © King's Printer for Ontario, 2024.